03. மனதார உன்னை (நன்றிப் பாடல்)
இயல்: கிறிஸ்து ராஜன்
இசை, பாடியவர்: கேத்தரின்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

மனதார உன்னைப் புகழ்ந்தேத்தி
பாடுவேன் இறைவா நன்றி
மறவாது எனை உந்தன் மகவாய்
சுமந்தாய் மகிழ்ந்தேன் நன்றி.

சரணம்

1. நான் உன்னை அழைத்தேனே
நீ என்னை அணைத்தாயே
உனதன்பில் நெகிழ்ந்தேன் நன்றி
உறவாக நினைத்தேனே
உயிர் ஆனாய் நீதானே
உயர்வாக புகழ்ந்தேன் நன்றி
யாருண்டு எனக்கென்று வருந்திட
நானுண்டு உனக்கென்று வருவதனால்.

2. தாய் என்றேன் உன்னைத்தானே
சேய் என்றாய் என்னை நீயே
நிகரில்லா உமக்கு நன்றி
கலங்காதே என்றுரைத்தாயே
கரமானாய் நீதானே
கனிவாகத் திகழ்ந்தாய் நன்றி
வாழ்வெல்லாம் வலியென்று வருந்திட
வா என்னில் வழியண்டு மொழிந்ததனால்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com** **(Easter 2022)**